தனி இதழ் ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 167

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: மார்கழி 10உ வெள்ளி (25—12—53) ★ ★ ★ வெளியூர்: மார்கழி 11உ சனி (26—12—53)

'தினமணி' மீது மீண்டும் குற்றச்சாட்டு

★★★★★★★★★★★

உரிமை உண்டு

★

"நீதி மன்றங்களின் கண்ணியம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதில், நான் அக்கறை கொண்டுள்ளதுபோல் இப் பாராளுமன்றத்தில் வேறு ஒருவருக்கும் அக்கறை இருக்க முடியாது. ஆனால், இதில் வேறு ஒரு அடிப்படையும் இருக்கிறது. நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்டுவிட்டால் அதை ஆராய்ந்து கூற பொது மக்களுக்கு உரிமை உண்டு. அப்படி ஆராய்வது கண்ணியமாக இருக்கவேண்டும். தன்னுடைய தீர்ப்பு மிக மிகப் புனிதமானது என்று எந்த நீதிபதியும் கூற முடியாது."

—உள்நாட்டு அமைச்சர் கைலாசநாத் கட்ஜு
24—12—53

★★★★★★★★★★★

—(:)—

ஒரு உறுப்பினர் சொன்னதை வேறு ஒரு உறுப்பினர் சொன்னதாகப் பொய்ச் செய்தி!

—(:)—

காங்கிரஸ் உறுப்பினர் உரிமைப் பிரச்னையை கிளப்பினார்

—(:)—

மேற்கொண்டு விவாதத்திற்கு ஆசிரியரின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது

சென்னை, டிச. 23—

சட்டசபை நடைமுறைகளை வெளியிடுவதில் செய்தநுள்ளதாகச் சொல்லப்படும் தவறை, திருத்தி வெளியிடுமாறு, 'தினமணி'யின் ஆசிரியருக்கு அறிவிப்பதாக, சட்டசபைத் தலைவர் சிவஷண்முகம் அவர்கள், சபையில் இன்று அறிவித்தார்.

விற்பனைவரி பற்றி சபையில் நடைபெற்ற விவாதத்தில், ஒரு பொதுவுடைமை உறுப்பினர் பேசினதை ஒரு காங்கிரஸ் உறுப்பினர் பேசினதாக 'தினமணி' வெளியிட்டு இருக்கிறது.

சபை உறுப்பினர் உரிமைப் பிரச்னை விவகாரத்தில், ஒரு வாரத்திற்குள்ளாக 'தினமணி' புகாருக்குள்ளாகி யிருக்கிறது.

உரிமைப் பிரச்னையைக் கிளப்பினவர் காங்கிரஸ் கட்சி உறுப்பினரான சாம்பசிவ ரெட்டியார் அவர்களாவார். பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த டி. சி. நாராயண நம்பியார் பேசினதை சாம்பசிவ ரெட்டியார் பேசினதாக 'தினமணி' வெளியிட்டிருப்பதாக அவர் குறை கூறினார்.

'வேண்டுமென்றே' சபை நடைமுறையைத் திருத்தி வெளியிட்டிருந்தால் தான், அது சட்டசபை உறுப்பினர் உரிமைக்குக் கேடு சூழ்ந்ததாகும் என்று தலைவர் விளக்கினார்.

குறிப்பிட்ட இந்த இனத்தில், 'தினமணி' வேண்டுமென்றே தவறு செய்திருக்காது என்று தலைவர் மேலும் குறிப்பிட்டார்.

செய்துள்ள தவறை அறிவிக்கப்பட்டால், அதன் ஆசிரியர் திருத்தம் செய்வார் என்று தலைவர் உறுதியளித்தார்.

'தினமணி' ஆசிரியரிடமிருந்து பதில் கிடைக்கும் வரையில், இந்த உரிமை பிரச்னையைத் தள்ளி வைக்கலாம் என்று ஆர். வி. சாமிநாதன் அவர்கள் கூற, தலைவர் அதற்கு ஒப்புக்கொண்டார்.

நரித் தந்திரம்!

★

"அரிஜனங்கள் ஏதோ கொஞ்சம் நிலம் வைத்துக் கொண்டு பிழைத்ததைப் பிடுங்கி, காங்கிரஸ் காரர்களுக்குக் கொடுத்தது சரியல்ல என்று கருதி, தியாகிகளிடமிருந்து நிலத்தைத் திரும்பக் கைப்பற்றியதற்காக என்னை அவர்கள் குளவி மாதிரி கொட்டுகிறார்களே!"

★

பரம்பரைப் பண்பு!

"நாட்டில் எல்லா ஜாதியினரிடையேயும் வறுமை சகஜமாக இருக்கிறது; என்னுடைய ஜாதிக்காரர்களில் அநேகர் பிச்சைக்காரர்களாக இருக்கிறார்கள்."

—சட்டசபையில் ஆச்சாரியார்
'தி-ந.' 24—12—53

ஞானோதயம்!

★

"மேல் ஜாதியினர் கீழ் ஜாதியைச் சேர்ந்தவர்களைக் கல்யாணம் செய்து கொண்டால் தான், சர்க்காரில் இனி உத்தியோகம் கொடுக்கப்படும் என்ற விதியை ஏற்படுத்த வேண்டும்."

—ஒரு காங்கிரஸ் உறுப்பினர்
24—12—53

பூணூல் பெருமை!

'தேர்தலில் தோற்ற சந்தானத்திற்கு கவர்னர் பதவி அளிக்கப்பட்டது; அதே தேர்தல் தொகுதியில் வெற்றி பெற்ற சுப்ரமணியம் (அரிஜன்) எங்கே இருக்கிறார் என்றே தெரியவில்லை."

—சட்டசபை காங். உறுப்பினர்
'தி-ந.' 24—12—53

பழங்குடி மக்களுக்கும் காங்கிரஸ் தியாகிகளுக்கும் சி. ஆர். சிண்டு முடிந்து விடுகிறார்!

அவர்களுக்கு உதவவே, தியாகி நிலத்தைப் பிடுங்கிக்கொண்டதாக மாய்மாலம்!

ஏழை 'அரிசன'ரை 'எடுப்பார் கைப்பிள்ளைகள்' என்று கேலி செய்கிறார் ஆச்சாரியார்

தீண்டாமைக்கும் வறுமைக்கும் முடி போட்டு உண்மை நிலையை மறைக்கப் பார்க்கிறார் பிரதமர்

சென்னை, டிச. 23—

"அரிசனங்களில் பெரும்பான்மையோர் ஏழைகளாகக் கிடக்கும் நிலையை, இந்த ஏழை அரிசனங்களுக்கு விவசாய நிலங்களை அளிப்பதன் மூலமே போக்க முடியும். இந்தக் கொள்கை காங்கிரசின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாகும்."

"எனது சொந்தக் கட்சியினர்களிடையேயும், ஆதரவிழக்கும் அபாயத்தைப் பொருட்படுத்தாமல், அரசியல் தியாகிகளுக்கு அளிக்கப்பட்டிருந்த நிலங்களை நான் மீண்டும் எடுத்துக் கொண்டதற்கு இதுவும் ஒரு காரணமாகும்."

"இதனால்தான் தங்களுடைய நிலங்களை அரசாங்கம் எடுத்துக்கொண்டு, அரசியல் தியாகிகள் என்ற காரணத்திற்காக, காங்கிரசுக்காரர்களுக்குக் கொடுத்துவிட்டதாக பல அரிசனங்களிடமிருந்து வந்த புகார்களை ஒட்டியே, எனது கட்சியினரின் குளவிக் கொட்டுதலுக்கும், கோபக் கண்டனங்களுக்கும் எதிராக தியாகிகளுக்கு மேலும் நிலங்கள் ஒதுக்குவதை நான் நிறுத்தினேன்."

"இத்துறையில் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட சில நிலங்களையும், எடுத்துக்கொண்டேன். இதற்காக எனக்கு நன்றி கூறுமாறு நான் கேட்டுக்கொள்ளவில்லை; புகார் கூறவேண்டாமென்றே நான் கேட்டுக்கொள்கிறேன்."

—இவ்வாறு, சென்னை சட்டசபையில், அரிசன நலன் பற்றிய மான்யக் கோரிக்கை விவாதத்தின்போது, சி. இராசகோபாலாச்சாரியார் பேசினார்.

23-12-53ல், கூடிய சென்னை சட்டசபையில் அரிசன நலன் பற்றிய மான்யக் கோரிக்கை நிறைவேறியது.

இந்தப் பிரச்சினை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சென்னை முதலமைச்சர் ஆச்சாரியார் பேசுகையில் கூறியதாவது:—

"தொடக்கத்தில் இச் சிக்கல் தீண்டாமையை ஒழிப்பதாகவே இருந்தது. ஆனால், இப்போது இச் சிக்கல் விடயம் ஏழ்மை ஒழிப்பு விடயமாக ஆகியுள்ளது."

"இந்தச் சிக்கலின் தன்மையில் ஏற்பட்ட இந்தப் பெரு மாற்றத்தின் விளைவாக இதனுடைய தொடக்ககால அம்சத்தையே மறந்துவிட நேர்ந்துள்ளது. இதற்குக் காரணம், அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்களில்

(4-ம் பக்கம் பார்க்க)

எதிர்ப்பவர்களை பழித்துவிட்டு, தம்மை பரிசுத்த ஆவி என்கிறார் ஆச்சாரியார்!

'ஜாதி அரசியல்' கண்கொண்டு பார்க்கின்றனர் என்று பழி சுமத்தல்!

★

சென்னை, டிச 24—

"ஜாதி வேற்றுமைகள் காரணமாக நாட்டுக்குப் பயனுள்ள விஷயங்களை உண்மைக் கண்ணோட்டத்துடன் சீர்தூக்கிப் பார்க்காமல் நாம் தவறிவிடும் போக்கு இந்த மாநிலத்தில் இருந்து வருவது துரதிருஷ்டவசமே ஒன்றைப் பற்றியே நினைத்திருப்பது தவறாகும்,"

என்று, கல்வி மான்யக் கோரிக்கை பற்றிய விவாதத்தின் போது, சட்டசபையில், ஆச்சாரியார் கூறினார். அவர் மேலும் பேசியதாவது:

"குழந்தைகளுக்கு நல்ல முறையில் சிந்திக்கும் மார்க்... ...ற்றுக் கொடுப்பதுதான் ஆரம்பக் கல்வி. ஒரு விஷயத்தை நினைவில் வைத்துக்

'இந்து' இதழின் கண்டனத்துக்கும், 'மன வேறுபாடு' என்று மழுப்புகிறார்!

கல்வித் திட்டத்தை எதிர்ப்பவர்மீது ஆச்சாரியார் பாய்ச்சல்!

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 24-12-1953 வியாழன்

உரிமைக்கு உலை!

காங்கிரஸ் ஆளவந்தார்களைக் காட்டிலும், வெள்ளை ஏகாதிபத்திய வெறியர்களே, நம் மக்களுக்கு அதிகமான உரிமைகளை வழங்கி வந்தார்கள் என்று சொல்லத் தகுந்த ஒரு நிலை இந்தியத் துணைக்கண்டத்துக்கு ஏற்பட்டுக் கொண்டே வருகிறது. எண்ண, எழுத, பேச, கூட, செயல்பட ஆகிய இன்றியமையாத எல்லாத் துறைகளிலும் தனி மனிதர்களுக்கு உரிமை வழங்கப்பட்டிருப்பதாக, இந்திய அரசியல் சட்டத்தை எடுத்துக்காட்டி, வீண் ஜம்பமாட காங்கிரஸ் ஆளவந்தார்கள் எதற்கெடுத்தாலும் முன்வருகிறார்கள். இதுபோல், வேறு எந்நாட்டு மக்களுக்கும் உரிமை தரப்பட்டிருக்கவில்லை, என்று வேறு, அவர்கள் பீற்றிக் கொள்ளுகிறார்கள். ஆனால், நடைமுறையில் ஆளவந்தார்கள் உள்ளமும், நடவடிக்கையும், இந்தியச் சட்டத்தின் உரிமைப் பிரிவை அரண் செய்வதாக இல்லை. அந்த உயர்ந்த நோக்கத்தை, ஏதாவது பொருத்தமற்ற காரணத்தைக் காட்டிக் குலைப்பதிலேயே ஆளவந்தார்கள் முயற்சி இருந்து வருகிறது.

பத்திரிகை ஆட்சேபணை தடுப்புச் சட்டம் ஒன்றே போதும், மக்களுக்குள்ள பிறப்புரிமையை ஒழிப்பதில், காங்கிரஸ் ஆளவந்தார்களுக்கு எவ்வளவு ஆர்வம் இருக்கிறது என்பதை விளக்குவதற்கு!

அடுத்தாற்போல் காவல் தடுப்புச் சட்டம். அரசுக்கு ஆபத்து, சர்க்கார் கவிழ்க்கும் முயற்சி என்றெல்லாம் சாக்குக் கூறி, ஏழைப் பங்காளர்களான உரிமை வேட்கையினரின் புனிதமான நாட்டுச் சேவையை ஒடுக்கி வந்தது. இந்தத் தடுப்புக் காவல் சட்டம் ஆளவந்தார்களுக்குப் பெருந் துணையாக இருந்துவந்திருக்கிறது என்பது, உண்மையிலும் உண்மையாகும். ஆளவந்தார்களின் இந்த மனஎரிவு, அரசியல் சட்டத்தின் உரிமைப் பண்புக்கு நேர்முரணானது என்பதை நாம் சொல்லத் தேவையில்லை. வெடிக்கும் எரிமலையின் வேகத்தைத் தணிப்பதற்கு, இரண்டொரு குடம் தண்ணீரை அதன் மீது ஊற்றிவிட்டால், எரிமலை தண்ணென்னும் நிலை பெற்றுவிடும் என்று நினைக்கும் புத்திசாலித்தனம் போன்றதேதான், தடுப்புக் காவல் சட்டத்தை ஆளவந்தார்கள் பெரும் பாதுகாப்புச் சாதனமாகக் கருதிக் கொண்டிருக்கும் போக்கும்!

யூனியன் சர்க்காரில் கொலு வீற்றிருக்கும் காங்கிரஸ் ஆளவந்தார்கள், இப்பொழுது தனிநபர் உரிமைக்கு உலை வைக்கும், பயங்கரமானதோர் சட்டத்தைக் கொண்டுவர திட்டமிட்டுள்ளனர். அப்படிக் கொண்டுவரப்படும் சட்டமும் தனிஉருவில் அல்ல. ஏற்கனவே நடைமுறையில் உள்ள அருப்பிடித்த சட்டத்தில் உள்ள இரண்டொரு உட்பிரிவுகளைத் திருத்துவதின் மூலம், மக்களின் உரிமைக்குக் கேடு சூழ காங்கிரஸ் ஆளவந்தார்கள் முனைந்து விட்டார்கள்.

பிரிட்டிஷார் கொடுத்துவிட்டுச் சென்ற அடக்குமுறை சட்டப் பரிசுகளில் கிரிமினல் திருத்தச் சட்டம் என்பதும் ஒன்றாகும். ஒரு காலத்தில் டெல்லி சட்டசபையில், காலஞ்சென்ற சத்தியமூர்த்தி அய்யர், இதுபற்றி, 'சட்டமில்லாச் சட்டம்' என்றும் 'தெய்வத்திற்கு எதிரான சட்டம்' என்றும் மிகக் கடுமையாகக் கத்தி இருக்கிறார். அப்போதைய ஆட்சியின் சட்ட மந்திரிக்கும், ஐயர் அவர்களுக்கும் இதுபற்றி பலநாள் காரசாரமான வாக்குவாதம் நடைபெற்றது. சத்தியமூர்த்தியாரின் வாதத்தை இப்பொழுதுள்ள காங்கிரஸ் ஆளவந்தார்கள் ஒருமுறை நோக்கவேண்டும் என்பதே நமது பேரவா.

குடியரசுத் தலைவர், கவர்னர், அமைச்சர், மற்ற சர்க்கார் அதிகாரிகள் ஆகியவர்களிடம் காணப்படும் நியாயமான குறைகளை இனி வெளியிட்டாலும், அப்படி வெளியிட்டவர்களை உடனடியாகப் போலீசார் கைது செய்து, அவர்கள் மீது வழக்குத் தொடுக்க, செய்யப்பட இருக்கும் திருத்தம் போலீசுக்கு அதிகாரம் தருகிறது.

எடுத்துக்காட்டாகக் கூற வேண்டுமானால், ஆந்திரகேசரி பிரகாசம் அவர்கள், முன்னாள் சென்னை சட்டசபையில் அப்பொழுதிருந்த காங்கிரஸ் அமைச்சர்கள்மீது லஞ்சம் பெற்ற ஒழுங்கீனக் குற்றச்சாட்டுகள் சுமத்தினாரே, அதுபோல, இனி யாராவது செய்தால், அதுவும், திருத்தப்பட இருக்கும் சட்டப் பிரிவின்கீழ் குற்றமாகக் கருதப்பட்டாலும் கருதப்படலாம், அப்படிக் குற்றம் சுமத்துகிறவர்கள்மீது, உடனே கிரிமினல் நடவடிக்கை எடுக்கப் போலீசுக்கு அதிகாரம் தரப்படும். அதைப் பத்திரிகையில் வெளியிடுகிறவர்களையும் அந்தத் திருத்தச் சட்டம் பாதிக்கும்.

குடியரசுத் தலைவரும் சரி, மாநில கவர்னரும் சரி, வேறு சர்க்கார் உத்தியோகத்தில் இருப்பவர்களும் சரி அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

தாங்கள் வீற்றிருக்கும் பதவியின் கண்ணியத்தையும், நடுநிலைமையும் மறந்து, வெறும் காங்கிரஸ் ஆட்சியின் காவலர்களாக மாறி, மாற்றுக் கருத்தினரை நேரடியாக, சொல்லிலும் செயலிலும் சாடத் துணிந்தாலும், அவர்கள் வீற்றிருக்கும் பதவியின் புனிதத்தைக்கூட பத்திரிகைகள் சுட்டிக்காட்டி, அவர்களுக்கு அறிவு கொளுத்தக்கூடாது. அதுவும், கருதியிருக்கும் திருத்தப் பிரிவின்படி குற்றமாகி விடும்.

இப்போது அமுலில் உள்ள சிவில் சட்டத்தில், தனி நபர்களுக்கு ஏற்படுகிற மான நஷ்டத்திற்குப் பாதுகாப்பும், பரிகாரமும் இருக்கிறது. எவ்வளவு பெரிய பதவிகளில் இருப்பவர்களாக இருந்தாலும், அந்தச் சிவில் சட்டப்படி, பாதிக்கப்பட்டவர்கள் பரிகாரம் தேடிக்கொள்ளட்டும் என்று சர்க்கார் இருப்பதுதான் முறை.

இங்கிலாந்து அரசியல் மரபைப் பின்பற்றியே செயல்படுவதாகச் சொல்லிக் கொள்ளும் காங்கிரஸ் ஆளவந்தார்கள், வேறு எந்த ஜனநாயக நாட்டிலும் இல்லாத ஒரு ஏற்பாட்டை, கிரிமினல் குற்றப்பட்டிக்குள் கொண்டுவர ஏன் முனைகிறார்களோ நாம் அறியோம்.

பத்திரிகை உரிமைக்கு உலைவைக்கும் இந்தச் சட்டத்தை, கிரிமினல் திருத்தச் சட்டத்தின் பிரிவுகளுக்குத் திருத்தம் என்று, புறக்கடை வழியாகக் கொண்டுவர, காங்கிரஸ் ஆளவந்தார்கள் முனைந்திருப்பதிலிருந்தே, அவர்களுடைய உள் எண்ணம் அம்பலமாகிறது. இந்தத் திருத்தம் பார்லிமெண்டில் அடுத்த ஆண்டுத் துவக்கத்தில் கொண்டுவரப்பட இருக்கிறது. சொந்தக் கட்சியினரே பெருந்தொகையினராக உள்ள இந்தியப் பார்லிமெண்டில் இந்தத் திருத்தம் சுலபமாக, நிறைவேறிவிடும் என்பதில் ஆட்சேபனை இல்லை. ஆனால், தனி நபர்களுக்கு எழுத்துச் சுதந்திரம் கொடுத்துவிட்டு இருப்பதாகக் கூறிக்கொள்வதில் உள்ள பொய்மையும் உலகுக்கு விளக்கமாகி விடும் என்பதிலும் ஐயமில்லை.

விளாங்குளம் வழி காட்டுகிறது!

தீவிர காங்கிரஸ் இளைஞர்கள் ஐம்பதின்மர் தி.மு.க. உறுப்பினராயினர்

18-12-53-ல், பேராவூரணியில் திராவிட முன்னேற்றக் கழகச் சார்பாக மன்னார்குடி தோழர் நாராயணசாமி தலைமையில், தோழர்கள் கருணாநிதி, முல்லைசத்தி ஆகியோருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின் போது பேராவூரணியை அடுத்த விளாங்குளம் இளைஞர்கள் ஐம்பது பேர் (காங்கிரஸ் செயலாளர் உட்பட) காங்கிரசிலிருந்து விலகி திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்துவிட்டதாக அறிவித்து, மேடையில் கூறியதோடு—அந்த மகிழ்ச்சியின் அறிகுறியாக, கற்கண்டு, பழம் வெற்றிலை முதலியவைகளை தோழர் கருணாநிதி உட்பட அனைவருக்கும் வழங்கி, தூத்துக்குடி வழக்கு நிதிக்காக இருபத்தைந்து ரூபாயும் அளித்தார்கள்.

அண்மையில் காங்கிரசு ஆட்சியின் அடக்குமுறை தர்பாரும், வடநாட்டு ஏகாதிபத்தியச் சுரண்டலுமே காங்கிரசின் மீது தங்கட்கு வெறுப்பை ஏற்படுத்தியதென்றும், திராவிட நாடு பெற, தி. மு. கழகம், நடத்தும் எந்த அறப்போரிலும் ஈடுபடத் தாங்கள் தயாராயிருப்பதாயும் அந்தத் தோழர்கள் அறிவித்தனர்.

விளாங்குளம் தோழர்களின் அந்த விழிப்பு, பேராவூரணி வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. (ந. நி.)

நாற்று நடுவுக்கு நூதன சாதனம்

சென்னை, டிச. 24—

வயல்களில் நாற்று நடுமுன், சேரும் சகதியுமாக உள்ள நிலத்தில் பசுந்தழை உரங்களைப் போட்டு சமனப்படுத்தும் நூதன சாதனம் ஒன்றை சென்னை சர்க்கார் விவசாய இலாகாவினர் கண்டுபிடித்துள்ளனர். இதை இரு எருதுகள் இழுத்துச் செல்லும். இதை செய்வதும் பிரமாதமில்லை. கிராமத் தச்சனே செய்துவிடலாம்.

இது, ஒரு நாளைக்கு மூன்று ஏக்கர்களுக்கு பசுந்தழை உரமடித்து சமன் செய்யக்கூடியது. தஞ்சை ஜில்லாவில், இந்த வேலையைச் செய்ய வெளியிடங்களிலிருந்தும் ஆட்கள் கொண்டுவரப்படுவது வழக்கம். ஒரு நாளைக்கு ஒரு ஏக்கருக்கு 10 பேர் வேலை செய்தால்தான் உரமடித்து சமன்படுத்த முடியுமாம்.

பிரான்சு குடியரசுக்குப் புதிய தலைவர்

12-வது வாக்கெடுப்பில் முடிவாயிற்று

ரெனேகோடி என்பவர் பிரான்சு குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார். இவர் தேர்தலுக்காக 12 முறை வாக்கெடுப்பு நடைபெற்றது.

மொத்த வாக்காளர் எண்ணிக்கையில் சரி பகுதிக்கு மேல் ஒரு வாக்குக் கூடுதலாக எவர் பெற்றிருக்கிறாரோ அவருக்குத்தான் வெற்றி கிடைக்கும். அந்த வரையறைப்படி, 11 முறையும் நடந்த வாக்கெடுப்பில் ஒருவரும் தேவையான வாக்குகளைப் பெறாததால், ஒருவருக்கும் வெற்றி கிட்டாமல் போய்விட்டது. இறுதியாகப் 12-வது முறையாக நடைபெற்ற வாக்கெடுப்பில் கோடிக்கு 477 வாக்குகளும், சோஷலிஸ் நாகலீனுக்கு 328 வாக்குகளும் கிடைத்தன. அதிக வாக்குகள் பெற்ற கோடி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

குளிரா? ஓடிவிடுமே!

பான், டிச. 21—

குளிரை ஓட்டிவிட்டு, கோடையாகச் செய்யலாம் என்ற நிலைமையை மேற்கு ஜெர்மனி என்ஜினியர் ஒருவர் நிரூபித்துக் காட்டி இருக்கிறார்.

'கௌஷீசர' என்ற இடத்தில், மிகப் பெரிய லாபிரட்டரி கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. 1954-ல் இது வேலை செய்ய ஆரம்பிக்கும்.

'டமாரம்' கொட்டுகிறார் டல்லஸ்!

ரஷ்ய நிபந்தனையை ஏற்க முடியாதாம்

வாஷிங்டன், டிச. 22—

"ரஷ்ய ஆளும் வர்க்கத்தினர் அந்நாட்டு மக்களைச் சுரண்டி வருகிறார்கள்; மக்கள் யுத்தத்தைத் தாக்குப் பிடிக்க முடியாத அளவுக்கு சுரண்டப்பட்டு விட்டனர்."

இவ்வாறு அமெரிக்க அரசாங்க மந்திரி டல்லஸ் கூறினார். தேசிய பத்திரிகையாளர் சங்கத்தில் அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு பலம் இப்போது குன்றிவிட்டது. இதற்குக் காரணம், ரஷ்யாவின் கோஷ்டிகளுக்குள் நிலவி வரும் அதிருப்தியே யாகும்." என்றார்.

"அணுசக்தி பற்றி ரஷ்யாவின் நிபந்தனையை யு. எஸ். ஒரு போதும் ஏற்றுக்கொள்ளாது; உரையாடல் நடத்தும் ஆவலில் நாம் சலுகைகளை அளிப்போம் என, ரஷ்யா எதிர்பார்க்கிறது. ரஷ்யாவுக்கு விட்டுக் கொடுத்து உரையாடல் நடத்த நமக்கு அவசியமில்லை."

"அணுக்குண்டை தடை விதிக்கும் விஷயம் ஐசனோவரின் திட்டத்தில் இல்லை" என்று அவர் மேலும் சொன்னார்.

தென்கிழக்கு ஆசிய நாடுகள்

கூட்டு மாநாடு நடத்த இலங்கைப் பிரதமரின் அழைப்பு

கொழும்பு, டிச. 23—

பொதுப் பிரச்னைகளை விவாதிப்பதற்கு, அடுத்த ஆண்டு மாநாடு கூடுவதற்காக இந்தியாவின் பிரதம மந்திரி நேரு, பர்மா பிரதமர் தாக்கின்-நு; பாகிஸ்தான் பிரதமர் முகமதலி ஆகியோருக்கு, இலங்கைப் பிரதமர் கொத்தலவாலா அழைப்பு அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது.

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மாநாடு ஒன்று நடத்த வேண்டுமென, கொத்தலவாலாவின் எண்ணத்தில் தோன்றிய திட்டத்தின் விளைவே இது என்று சொல்லப்படுகிறது.

இம்மாநாட்டின் நோக்கம், தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கிடையே அவைகளின் தனிப்பட்ட ஆதிபத்திய உரிமை பாதிக்காமல், அவைகளின் சமூக நலன்களை அபிவிருத்தி செய்வதே யாகும்.

தெரிந்து கொள்ளுங்கள்

புதுடில்லி, டிச. 25—

1. ரேடியோ லைசென்சு கட்டணங்களின் மூலம், ஆண்டு தோறும் சுமார் 115.83 லட்ச ரூபாய் வருமானம் கிடைத்து வருகிறது; 1952—53ல், புதிதாக வழங்கப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட லைசென்சுகளில் மொத்த எண்ணிக்கை 7,77,210 ஆகும்.
2. மத்திய ரஸ்தா நிதியின்கீழ், 1952—53-ல், மொத்தம் சுமார் 5.20 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டது.
3. இந்த ஆண்டில், சிமிட்டியின் மாத சராசரி உற்பத்தி அளவு 3,25,000 டன்; சென்ற ஆண்டில், இது, 2,92,000 டன்னாக இருந்தது.
4. இந்தியாவில் அம்மோனியம் சல்பேட் உற்பத்தி 1951-52ல் 35,000 டன்னாக இருந்தது; 1952—53-ல், 2,30,000 டன்னாக அதிகரித்துள்ளது.
5. இந்தியாவில் பிரெஞ்சுப் பிரதேசங்களின் எல்லையோரப் பகுதியில் இந்திய சர்க்கார் ஏற்படுத்தியுள்ள கள்ளக் கடத்தல் தடுப்பு நிலையங்கள், 1952—53-ல் கள்ளத்தனமாக கடத்தப்பட்ட சுமார் 14,32,000 ரூபாய் பெறுமான முன்ன சரக்குகளைப் பறிமுதல் செய்தன.
6. 1953 மார்ச் மாத இறுதியில், தட்சண ரயில்வேயில், மொத்தம் சுமார் 7,890 லெவல்-கிராசிங்குகளும், சுமார் 138 மேம்பாலங்களும், 65 தனித்த பாலங்களும் இருந்தன.

மதுரை தி. மு. கழக தோழர்கள்மீது ஜாமீன் வழக்கு

மதுரை, டிச. 24—

இளைஞர் காங்கிரசுக் கூட்டத்தில் குழப்பம் விளைவித்ததாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தோழர்கள் என். முத்து, எம். அய்யாச்சாமி, கே. என். இராசமான், எம். ஆர். கணேசன் உட்பட 31 பேர் மீது போலீசாரால் தொடரப்பட்ட ஜாமீன் வழக்கு 18—12—53-ல், நகர முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் திரு. பி. என். தங்கமணி முன்பு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அவ்வமயம் அரசாங்கத் தரப்பில் இரண்டு சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.

முதலாவதாக காமராஜ் வாசகசாலை துணைச் செயலாளர் முத்துச்சாமி சாட்சியமளித்தார் அவர் கூறியதாவது;—

"நான் காமராஜ் வாசகசாலை துணைச் செயலாளராக இருந்து வருகிறேன்; 15—3—53 மாலை காமராஜ் வாசகசாலையில் ஆண்டு விழா நடைபெற்றது. இதை யொட்டி அலியா இசைக் கச்சேரியும் நடைபெற்றது. கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் குழப்பம் ஏற்பட்டது; கூட்டத்தில் கல் விழுந்தது; யார் இக் கற்களை எறிந்தார்கள் என்பது தெரியாது; வேலயுதம் என்பவரைச் சிலர் தாக்கிவிட்டார்கள்; அவரைத் தாக்கியவர் யார் என்று சொல்ல முடியாது; காமராஜ் வாசகசாலைக்குத் தெற்கே திராவிட முன்னேற்றக் கழகத்தின் உட் கிளையான தானமுத்து நடராசன் நினைவுப் படிப்பகம் இருக்கிறது; இவர்களுக்கும், எங்களுக்கும் யாதொரு விதமான தகராறும் கிடையாது; கூட்டத்திற்குப் பல இடங்களிலிருந்து காங்கிரசுக்காரர்கள் வந்திருந்தனர்; கூட்டத்தில் ஏற்பட்ட குழப்பத்தைப் பற்றி போலீசாரிடம் புகார் செய்தோம்."

எதிர்தரப்பு வழக்கறிஞர் திரு டி. தர்மராஜ் சந்தோஷம் சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார். அப்போது சாட்சி கூறியதாவது:—

"காமராஜ் வாசகசாலையிலிருந்து சுமார் 60 அடி தூரத்தில், தானமுத்து நடராசன் படிப்பகம், இளைஞர் முற்போக்கு மன்றம் ஆகியவைகள் இருக்கின்றன; அதன் கொடிகள், இதர சாமான்கள் உடைக்கப்பட்டிருந்ததாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளைத்தான் படித்தேன்; நான் நேரில்போய்ப் பார்க்கவில்லை."

இரண்டாவது சாட்சியாக வேலாயுதம் என்பவர் விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது :—

"நடந்த 15—3—53 மாலை காமராஜ் வாசகசாலை ஆண்டு விழா நடைபெற்றது; கூட்டத்திற்கு என். ஆர். தியாகராசன், எம். அலியார் ஆகியோர் வந்திருந்தனர்; கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது; தெற்குப் பக்கமிருந்து கூட்டத்தில் கல் விழுந்தது. யார் கற்களைப் போட்டார்கள் என்று தெரியாது; குழப்பம் செய்துவிட்டுச் சிலர் ஓடினார்கள் என்பது தெரியும்; அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியாது; 3-10-53ல், மதுரைக்கு இந்தியப் பிரதமர் நேரு வந்திருந்த சமயம், அமெரிக்கன் கல்லூரிக்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சுமார் 200 பேர்கள் கருப்புக்கொடி காண்பித்தார்கள் 'வடநாட்டுத் தலைவரே திரும்பிப் போ' என்று அவர்கள் சத்தம் போட்டார்கள்; அந்தக் கூட்டத்தில், என். முத்து, எம். அப்பாச்சாமி கே என். இராசமான், பாண்டி சேர்வை ஆகியோர் இருப்பதைக் கண்டேன்; காமராஜ் வாசகசாலை சுமார் ஐந்து ஆண்டுகளாக இருப்பது தெரியும்; நான், சம்பவம் நடைபெற்ற அன்றுதான் அங்கே சென்றிருந்தேன்."

சாட்சியை எதிர்தரப்பு வழக்கறிஞர்களான திரு. டி. தர்மராஜ் சந்தோஷம், திரு. என் பார்த்தசாரதி நாயுடு ஆகியோர் குறுக்கு விசாரணை செய்தனர். அப்போது சாட்சி கூறியதாவது :—

"நான் கோரிப்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன்; விவசாயம் செய்வது என்னுடைய வேலை; இங்கிருந்து 9 மைல் தூரத்தில் உள்ள மஞ்சப்பட்டிக் கிராமத்தில் நிலம் இருக்கிறது."

"நடராசன் என்பவரைத் தெரியும்; அவர் பாத்திர வணிகம் செய்ய வருவார்; அவரை நான் அடித்தது கிடையாது; போலீசார் என்னை அடையாளம் காட்டும்படி இதுவரை சொல்லவில்லை; காமராஜ் வாசகசாலை ஆண்டு விழா நிகழ்ச்சிக் குறிப்பு எனக்குக் கிடைத்தது; அந்த அழைப்பு மற்றவர்களுக்கும் கிடைத்ததா என்பது எனக்குத் தெரியாது; நான் மேடையில் உட்கார்ந்திருந்தேன்; பின்னர் காப்பி அருந்திவிட்டு வெற்றிலைப் பாக்குக் கடைக்குப் போனேன்; ஆண்டி முத்து, ஆண்டு அறிக்கையைப் படித்தார்; தெற்குப் பக்கமிருந்து ஏராளமான பேர் வந்தார்கள்; அவர்கள் எங்கே இருந்து வந்தார்கள் என்பது தெரியாது; தெற்குப் பக்கத்தில் திராவிட முன்னேற்றக் கழகக் கொடி பறந்துகொண்டிருந்தது; அந்த வாசகசாலையின் பெயர் தெரியாது."

"வெற்றிலைப் பாக்குக் கடைக்கு முன்னால் நின்றேன்; அப்போது என்னைப் பிடித்து இழுத்துச் சென்று தாக்கினார்கள்; நான் திமிறிக் கொண்டு வர முயற்சித்தேன்; என்னைத் தாக்கும்போது யாரும் தடை செய்யவில்லை; நான் திரும்பித் தாக்கவில்லை; இளைஞர் காங்கிரசிற்குக் கோபால் என்பவர் அமைப்பாளராக இருக்கிறார்; மேலச் சித்திரை வீதியில் இதன் அலுவலகம் இருக்கிறது; இதற்கு ஆண்டுச் சந்தா நான் வசூலிக்கப்படுகிறது; எனக்கு இந்தி பேசத் தெரியாது; எல்லோரும் இந்தி பேசக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற விதி இருக்கிறது; ஆனால், கற்றுக்கொள்ளவில்லை; 35 வயதிற்கு உட்பட்டவர்கள் தான் இளைஞர் காங்கிரசில் இருக்க முடியும்; இந்த வயதிற்குட்பட்ட சுமார் 500 பேர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்."

"திராவிடர் கழகம் நடத்திய இந்தி அழிப்பு இயக்கத்திற்கு எதிராக நடைபெற்ற இயக்கத்திற்கு நான் போகவில்லை; இந்த இயக்கத்தைத் தேசிய முன்னணியினர் தான் நடத்தினார்கள்; பொது மக்களிடத்திலிருந்து 'செலவிற்குப் பணம் வசூல் செய்யப்பட்டது; நான் அடிபட்டதற்கு டாக்டரின் அத்தாட்சி வாங்கவில்லை; வடநாடு—தென்னாடு என்ற பாகுபாடு காரணமாகவே இவர்கள் (தி. மு. கழகம்) நேருவிற்குக் கருப்புக் கொடி காண்பித்தார்கள்; நான் ஒரு இந்தியன், தமிழன் என்று சொல்ல மாட்டேன்; திராவிடன் என்ற வார்த்தை என் வாயிற்கே வராது; நான் தியாகி என்பதற்காக நிலம் பெற்றுக் கொண்டேனா என்பதைக் கூறமுடியாது; சிறைக்குச் சென்றிருக்கிறேன்; இந்தியப் பிரதமர் நேரு 'நான் சென்ஸ்' என்று கூறியதாலோ, தேனாம்பேட்டையில் நடைபெற்ற தேசிய ஊழியர் கழகக் கூட்டத்தில், சி. இராசகோபாலாச்சாரியார், 'கணக்கைத் தீர்த்துக்கட்ட வேண்டும்' என்று பேசியதாலோ, அவர்கள் (தி.மு. கழகம்) ஆத்திரமடைந்தார்கள் என்று என்னால் கூற இயலாது."

இத்துடன் இன்றைய சாட்சியம் முடிவடைந்தது. ஜனவரி மாதம் 5-ம் தேதி மீண்டும் விசாரணை நடைபெறும்.

அரசாங்கத் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். சுந்தரராஜ அய்யங்காரும், அவருக்கு உதவியாக தென்சரகம் போலீஸ் இன்ஸ்பெக்டர் திரு. ராஜரங்கம், சப்-இன்ஸ்பெக்டர் திரு. சி. முனிசாமி நாயுடுவும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்களான திரு. என். பார்த்தசாரதி நாயுடு, டி. தர்மராஜ் சந்தோஷம். ஆறுமுகம் ஆகியோர் வாதாடினார்கள்.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை (புதுப்பேட்டை)

3-வது ஆண்டு விழாவும், வரவேற்புக் கூட்டமும்

இடம்: புதுப்பேட்டை தோட்டத் தெரு அருகில் இருக்கும் திடலில் (இராயப்பேட்டை)

27—12—53 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு

தலைவர் : எஸ். சுந்தரம்

பேசுவோர் :

மு. கருணாநிதி
டி. வி. நாராயணசாமி
எஸ். எஸ். இராசேந்திரன்
வி. இளஞ்சேரலாதன்
அலமேலு அப்பாதுரை

★

சாத்தூர்

27—12—53 ஞாயிற்றுக்கிழமை

பேசுவோர் :

மதுரை எஸ். முத்து
எட்டயபுரம் எஸ். கலிங்கன்
ஆர். பி. சன்யாட்சேன்

★

பட்டிவீரன்பட்டி

27—12—53 ஞாயிறு மாலை

தலைவர் :

ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ.

பேசுவோர் :

அ. பொன்னம்பலனார்
அருண்மொழி
பூங்கோதை

★

மேட்டூர்

28—12—53 திங்கள் மாலை

இடம் : பொதுசன சேவா சங்க மைதானம்

தலைவர் : சு. ப. குருநாதன்

பேசுவோர் :

சி. பி. சிற்றரசு
க. கு. சின்னசாமி

தோழர் கருணாநிதி சேலம் வருகை

★

தி. மு. கழக துவக்கவிழா

3-வது வட்டம், சாமிநாதபுரம், அரிசிப்பாளையம்

30—12—53 புதன் காலை 9 மணிக்கு

தலைவர்: புதூர் பி. என். அம்மச்சி கவுண்டர், எம். சி.

திறப்பாளர் :

தோழர் மு. கருணாநிதி

கொடியேற்றுபவர் ,

தோழர் கண்ணதாசன்

சொற்பொழிவாளர்கள் :

தோழர் ஈ. ஆர். கிருட்ணன்
,, சிற்றுணி ஏ. சுப்ரமணியம்
,, எஸ். வி. இராசகோபால்

மு. கருணாநிதி

ஜனவரி மாத நிகழ்ச்சிகள்

ஜன. 2 : லால்குடி
,, 3 : வண்ணை (சென்னை)
,, 10 : பொன்மலை, திருச்சி
,, 14 : மன்னார்குடி
,, 15 : நீடாமங்கலம்
,, 16 : கடலூர்-மாலை நிகழ்ச்சி
,, 17 : துறையூர்
,, 24 : உதகமண்டலம்
,, 30 : பழனி
,, 31 : திண்டுக்கல்

இடையில் உள்ள நாட்கள் எல்லாம் ஓய்வு நாட்கள். வேறு நிகழ்ச்சிகள் ஒத்துக்கொள்ள இயலாதென அறிவிக்கப்படுகிறது

ஒண்டிப்புதூர்

தி. மு. கழக ஆண்டு விழா

21—1—1954-ல் நடைபெற இருக்கும் மேற்படி ஆண்டு விழாவில், தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன் ஆகியோர் கலந்து கொள்ள இசைவு தந்துள்ளனர்.

ஐவர் வரவேற்புக் கூட்டம் ஒத்திவைப்பு

27—12—53 அன்று, பொதுச் செயலாளர் அண்ணாதுரை உட்பட ஐவருக்கும்,வேலூரில் வரவேற்புக் கூட்டம் ஏற்பாடாகியிருந்தது, ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

தூத்துக்குடி நிதிக்கென வசூலித்த கிளைக் கழகங்கள் மாவட்டக் கழகத்திடம் சேர்ப்பிக்க வேண்டுமென, மாவட்டச் செயலாளர் தோழர் ஏ. எல். சி. கிருட்ணசாமி வேண்டுகிறார்.

[நகர சபை வரவேற்பும் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று அறிவிக்கப்படுகிறது]

தபால் - தந்தி ஊழியர் சங்கம்

6-வது சென்னை மாகாண மாநாடு

27—12—53 ஞாயிறு மாலை 5 மணிக்கு சிதம்பரம் இராமசாமி செட்டியார் உயர்நிலைப் பள்ளியில் கனம் ராஜ்பகதூர் (இந்திய அரசாங்க தபால் தந்தி இலாகா உதவி மந்திரி) மாநாட்டை துவக்கி வைப்பார். தோழர் எ. பி. தளசிராம், தலைமை வகிப்பார். தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்.

பொறையாறு தி. மு. கழக செயற்குழு கூட்டம்

15—12—53 அன்று தோழர் வி. வைரமுத்து தலைமையில் தி மு கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் தமிழன்பன் செயலாளராகவும், எம் எச். எம். அபூபக்கர் துணைச் செயலாளராகவும், எஸ். தெட்சிணாமூர்த்தி பொருளாளராகவும், மற்றும் 6 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வடுகபட்டி தி. மு. கழகம்

செயலாளர் தோழர் கா. காமாட்சி தலைமையில் நடைபெற்ற செயற்குழுக்கூட்டத்தில், பொங்கல் விழாவிற்கு தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பியை அழைத்து இவ்வூரில் பொதுக் கூட்டம் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

தடுப்புக் காவல் சட்டம் நிறைவேறியது

புதுடில்லி, டிச. 23—

தடுப்புக்காவல் சட்டத்தை நீடிக்கும் பிரேரபணையை மக்கள் சபை இன்று அங்கீகரித்தது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அச் சட்டத்தை நீடிக்க போதிய நியாயம் இருப்பதாக அப் பிரேரபணையில் அங்கீகரிக்கப்பட்டது.

எதிர் கட்சியினர் கொண்டு வந்த ஒரு திருத்தம் பேரிலேயே சட்ட சபைக் கட்சி பிரிந்து ஓட்டெடுக்கப்பட்டது.

இத் திருத்தத்திற்கு 286 ஓட்டுகளும் கிடைத்ததால் திருத்தம் தோற்கடிக்கப்பட்டது.

இந்தியாவுக்கு அமெரிக்க நிபுணர் விஜயம்

புதுடில்லி, டிச. 24—

"தொழில் துறைப் பிரச்னைகள் சம்பந்தமாக இந்திய சர்க்காருக்கு ஆலோசனை கூறுவதற்காக, 1952—53ல் அமெரிக்காவிலிருந்து நிபுணரொருவர் இந்தியாவுக்கு விஜயம் செய்தார். பல இந்திய உலோக வார்ப்படத் தொழிற்சாலைகள் அவர் சேவைகளைப் பயன்படுத்திக் கொண்டன. அவர் சம்பந்தமாக 1952—53ல், 3,850 ரூபாய் செலவழிக்கப்பட்டது," என்று மக்கள் சபையில், ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் குறிப்பிடப்பட்டது.

விளாப்பாக்கம் தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

வடஆர்க்காடு மாவட்டச் செயலாளர் அறிக்கைப்படி, தலைவர்கள் வரவேற்புக்கு வேலூரில் நிதி தருவதென முடிவு செய்யப்பட்டது நிதி சேர்க்கும் வேலை துரிதமாக நடைபெறுகிறது. தோழர்கள் : கருணாநிதி, ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., ஆகியவர்களை அழைத்து பொங்கல் விழா நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

பெரிய வடவாடியில் பொதுக் கூட்டம்

11—12—53ல், தோழர் எம். இராசாங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் பொன்னம்பலம், என். எஸ். பி. மூர்த்தி, வி என். மணி, பி. என். இராமநாதன், பி வி. இராமசாமி ஆகியோர் பேசினர்.

கூட்டத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடையளிக்கப்பட்டது - வரப்பெற்றோம் — நன்றியுடையது— பொறுப்பாளர்.

நாமக்கல் தி. மு. கழகம்

20-12-53ல், வேலூர் (சேலம்) அண்ணா இல்லத்தில் நாமக்கல் வட்டக் கழக சார்பில் வட்டக்குழு கூடியதில், ஏற்கனவே செயலாளரும், மாவட்டப் பிரதிநிதியும் தேர்ந்தெடுத்துவிட்டதால் தற்பொழுது துணைச் செயலாளராக கஞ்சை எடையாறு வடிவேலனையும், செல்லப்பம்பட்டி தோழர் என். எம். அங்கமுத்துவைப் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், தூத்துக்குடி நிதிக்கு வட்டக் கழகச் சார்பில் தோழர் அண்ணாதுரை அவர்களை அழைத்து ரூ. 500 கொடுப்பதாயும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அண்ணா முரசொலி மன்றம்

உதகை, டிச. 23—

20—12—53 அன்று செயற்குழுக் கூட்டம், தோழர் பொ. மாணிக்கம் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. அதுபோது, மன்றத்தின் துவக்க விழாவை, பொங்கல் திருநாளன்று நடத்துவதென தீர்மானிக்கப்பட்டதுடன், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளும் மாணவர்கள் தொடர்ந்து கற்கத் தடை

அவர்களை இராணுவப் பயிற்சிக்கு அழைத்துக் கொள்ள சர்க்கார் முடிவு

டமாஸ்கஸ், டிச. 24— சிரியா சர்க்கார் ஒரு விசித்திரமான முடிவிற்கு வந்திருக்கிறது. சர்க்காருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் பங்கு கொள்ளும் மாணவர்களை, மேற்கொண்டு அவர்கள் கற்க அனுமதிப்பதற்குப் பதிலாக, இராணுவப் பயிற்சிக்கு உடனடியாக அழைத்துக் கொள்ளுவது என்று சர்க்கார் முடிவிற்கு வந்திருக்கிறது.

எதிர்ப்பவர்களைப் பழித்துவிட்டு......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ள வேண்டுமென்று எவ்வளவுக் கெவ்வளவு நினைக்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு நம் மறந்து விடுவோம். இந்த விஷயத்தையெல்லாம் கல்வித்துறை நிபுணர்களிடம் விட்டுவிடுவோம். முற்றிலும் தகுதியுடையவர்கள் இதைப் பரிசிலனை செய்ய வேண்டும்.''

''பள்ளிக்கூடங்களுக்கு அதிகக் குழந்தைகளைக் கொண்டுவர வேண்டும். அந்தக் கட்டத்தில் அவர்களுக்கு நல்ல கல்வியளிக்க வேண்டும் என்றே எப்போதும் நான் விரும்பிவந்திருக்கிறேன். இதற்கும் ஜாதிக்கும் சம்பந்தமே கிடையாது.''

''குழந்தைகள் பள்ளிக்கூடம் வருவது குறைந்துவிட்டதென்று, சில உறுப்பினர்கள் சொன்னார்கள், ஆனால், எனக்குக் கிடைத்துள்ள தகவலின் படி, இப்போது அதிகக் குழந்தைகள் வருகிறார்கள்''

''மதுரை மாவட்டத்தில் ஆஜர் 40 சதவிகிதம் அதிகரித்துள்ளது இது பெரிய விஷயம். நூற்றுக்கு நூறு அதிகமாகாவிட்டாலும், முடிவில் 50 சதவிகிதமாவது ஆஜர் அதிகமாகுமென்று நம்புகிறோம்.''

''ஆனால், இது அரசியலுடன் சம்பந்தப்படுத்தப்பட்டு, ஜாதிப் பிரச்சினையாக விவாதிக்கப்படுவது, எனக்கும், இந்தத் திட்டத்திற்கும் ஒரு துரதிருஷ்டம் என்றே சொல்ல வேண்டும். இம்மாதிரி திரித்துக் கூறுவதில் தேர்ச்சியடைபவர்கள் இருக்கிறார்கள். ஆகையால், ஏதோ காரணத்திற்காக இதற்குக் கொஞ்சம் அவகாசம் கிடைப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்றில்லாமல், தகுதிவாய்ந்தவர்கள் இதைப் பூராவாக பரிசீலனை செய்யும் காலம் வருமென்று நம்புகிறேன்.''

''இத்திட்டத்தை வாபஸ் பெறவேண்டுமென்று பலர் பலவிதமான மொழிகளில் கேட்கிறார்கள். மூன்று மணி நேரப் படிப்பு போதாதென்கிறார்கள். பள்ளிக்கூட நேரம் போக மீதி நேரத்தில் தனியே இஷ்டப்படி விட்டுவிடக் கூடாதென்று சிலர் சொல்கிறார்கள் இதைப் பரிசிலனை செய்ய அவகாசம் எடுத்துக்கொண்டால் பெரிய விபரீதம் வந்துவிடுமென்று நான் நினைக்கவில்லை. இப்போது எதுவும் மாறுதல் செய்ய சாத்தியமில்லை.''

'''இந்து' பத்திரிகைகூட இதை ஆட்சேபிக்கிறதாகச் சொல்கிறார்கள். 'இந்து'வுக்கு ஒரு அபிப்பிராயம் இருக்கலாம். காங்கிரசில் நீண்ட காலமாக இல்லாத நண்பர்களுக்கு ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன்.''

'''இந்து', என்னுடைய பிறவித்தோழனல்ல; அதற்கு மாறானது என்றே சொல்லலாம். 1920—21-ல், ஒத்துழையாமை வேண்டுமென்று நான்சொன்னபோது, 'இந்து' என்னை ஆதரிக்கவில்லை. அதை நடத்துபவர்கள் கனவான்கள் தான்; தேசிய மனப்பான்மை உள்ளவர்கள்தான்; ஆனால், அவர்கள் வழி வேறாக இருக்கும்; அவர்கள் அபிப்பிராயம் வேறாக இருக்கலாம். ஆகையால் 'இந்து கூட' என்று பேசுவதில் பயனில்லை.''

''தனிப்பட்ட பத்திரிகைகள் பற்றி கவலைப்பட வேண்டாம். கல்வி என்பது மனோதத்துவத்தில் ஒரு பகுதி. அதாவது, குழந்தைகளின் மனோபாவத்தை அறிவது அவர்கள் நமது குழந்தைகள். அவர்களுடன் நாம் வாழுகிறோம்.''

''இவர்களை அழித்துவிட நான் முனைந்திருக்கிறேன் என்று யாராவது நினைத்தால் அவர்களுடைய மனதிலுள்ள சிக்கலான பிடிவாதத்தைக் கண்டு நான் பரிதாபப்படத்தான் முடியும்.''

''என் எதிர் காலத்தைப் பற்றி எனக்குக் கவலையில்லை. அதனால்தான், இதைக கொண்டு வந்திருக்கிறேன்.''

இருக்கும்போதே ஆசிரியர் இறந்தாரென்று பதவி

அதிக முயற்சிக்குப் பின் உயிர் பெற்றார்

சூரத், டிச. 23— [illegible] நிஷாபாய் என்ற வயோதிக ஆசிரியர், சூரத் மாவட்டத்திலுள்ள ஒரு பள்ளியில் பல ஆண்டு காலம் வேலை பார்த்து, சென்ற மூன்றரை ஆண்டுகளுக்கு முன்பு ஓய்வு பெற்று இருக்கிறார்.

அவர் இறந்து விட்டதாக மாவட்ட ஆட்சி மன்ற ஏட்டில் பதிவு செய்யப்பட்டுவிட்டது. இந்தத் தகவலை அறிந்த ஆசிரியர் அதிக முயற்சி எடுத்துக்கொண்டு தான் உயிரோடு இருப்பதை ஏடுகளில் மீண்டும் திருத்தம் செய்ய வைத்தார். இந்த உயிர் பெறுதலுக்கு நான்கு திங்கள் பிடித்தது.

லால்குடி வட்ட தி. மு. க. கிளைக் கழகங்களுக்கு

''27—12—53 ஞாயிறு மாலை 4 மணிக்கு, லால்குடி கிளைக் கழக அலுவலகத்தில், லால்குடி வட்டக் குழு அமைப்புக் கூட்டம் நடைபெறும். அனைவரும் தவறாது வர வேண்டுகிறேன். அதுபோது வட்டக் குழு அமைத்தல், செயற் குழு தேர்ந்தெடுத்தல், எதிர்கால வேலைத்திட்டம் ஆகியவையைபற்றி ஆராயப்படும். அழைப்பு கிடைக்கப்பெறுதவர்கள், இதனையே அழைப்பாகக் கருத வேண்டுகிறேன்,'' என்று, செயலாளர் அ. பெ. தர்மலிங்கம் அறிவிக்கிறார்.

பாராட்டுக் கூட்டம்

★

26—12—53 சனி மாலை 5-30 மணிக்கு, சென்னை, பெத்த நாய்க்கன்பேட்டை காசி விசுவநாதர் கோயில் திடலில் நடைபெறும்.

சென்னை 8-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், தோழர் சி ஆர். பாலசுந்தரம் தலைமையில் சிறைமீண்ட தலைவர்களுக்குப் பாராட்டுதலும், தூத்துக்குடி வழக்குக்கு நிதியும் அளிக்கப்படும்.

தோழர்கள் அண்ணாதுரை இரா நெடுஞ்செழியன். ஈ.வி.கே சம்பத், கே ஏ மதியழகன், என்.வி. நடராசன், காஞ்சீபுரம், சி. வி. ராசகோபால், எம். சி., வி. முனுசாமி, த. கோ. சந்தானம் (செயலாளர், திருவள்ளுவர் முன்னணிக் கழகம்) ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

பட்டுக்கோட்டை வட்ட தோழர்கட்கு

பட்டுக்கோட்டை தாலுக்கா, திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் குழு கூட்டம் 27—12—53 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு, பட்டுக்கோட்டை சின்னகடைத் தெருவில் உள்ள அழகிரி மன்றத்தில் நடைபெறும். அதுசமயம் தூத்துக்குடி சதி வழக்கு நிதி, தாலுக்கா மாநாடு ஆகியவை சம்பந்தமாக ஆலோசிக்க வேண்டியிருப்பதால், பட்டுக்கோட்டை தாலுக்கா கிளைக் கழகச் செயலாளர்கள் இதனையே அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன், என, தோழர் க. ரெங்கசாமி அறிவிக்கிறார்.

நாகை தி. மு. கழக தேர்தல் கூட்ட அழைப்பு

27—12—53 ஞாயிறு மாலை 6 மணிக்கு, நாகை முனிசிபல் மண்டபத்தில் (பார்க் சமீபம்) நாகை தி. மு கழக புத்தாண்டு செயற் குழு தேர்தலுக்கான பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அதுசமயம் புத்தாண்டிற்கு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருகைதர கேட்டுக்கொள்ளுகிறேன், என, துணைச் செயலாளர் டி. வில்சன் அறிவிக்கிறார்.

சேலம் தி. மு. க. மாவட்ட பிரதிநிதிகளுக்கு

''27—12—53 ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிக்கு, சேலம் செவ்வாய்பேட்டை கழகக் கட்டிடத்தில், மாவட்ட தி. மு. கழக கூட்டம் நடைபெறும். பல முக்கிய பிரச்னைகளை, குழு ஆலோசித்து முடிவு செய்ய வேண்டியிருப்பதால், மாவட்டப் பிரதிநிதிகள் அவசியம் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுகிறேன்,'' என, செயலாளர் ஜி. பி. சோமசுந்தரம் அறிவிக்கிறார்.

நாடகத்திற்குத் தடை

சென்னை, டிச. 12— சென்னை சர்க்கார் 'எமலோகம் நோக்கி பெரியார்' என்ற தமிழ் நாடகத்திற்குத் தடைவிதித்து, அந்த நாடகத்தை சென்னை மாநிலத்தில் எந்த இடத்திலும் நடத்தக் கூடாதென உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நாடார் மஹாஜன சங்கம்

23-வது மகாநாடு, சென்னை

27—12—53 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பச்சையப்பன் விளையாட்டு மைதானத்தில் அமையப்பெற்றுள்ள பாண்டியன் பந்தல்.

மகாநாட்டுத் தலைவர்:

நாகர்கோவில் டாக்டர் ஜான்ஷில்லையா, M B C M. அவர்கள்

மகாநாட்டுத் திறப்பாளர்:

சொலைக்காவல் திரு S. G. [illegible] நாடார் அவர்கள்

மாதர் மகாநாட்டுத் தலைவி:

மதுரை திருமதி இராஜம்மாள் வாலசுப்ரமணியம் அவர்கள்

மாதர் மகாநாட்டுத் திறப்பாளர்:

சென்னை திருமதி சுசீலா [illegible] B Sc அவர்கள்

நாடார் பெருமக்கள் அனைவரும் வரும்படி அன்புடன் அழைக்கிறோம் சென்னை வண்ணாரப்பேட்டை, மணியக்கார சௌல்ட்ரி ரோடு, 78-ம் நம்பர் கட்டிடத்திலிருந்து, 27—12—53-ம் தேதி புறப்படும் மாபெரும் ஊர்வலத்தில் அனைவரும் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

—வரவேற்பு சபையினர்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

விநயகம் குழுவினர்மீது வழக்கு ஒத்திவைப்பு

அரக்கோணம், டிச. 25— 26—9—53-ம் தேதி திருத்தணியில் நடந்த தி. மு. கழகக் கூட்டத்தில் குழப்பம் விளைவித்தும், தொண்டர்களைத் தாக்கியும், தோழர் ஏ எல்.சி. கிருஷ்ணசாமியின் காரை சேதப்படுத்தியும், கலவரம் செய்திருக்கக் குற்றம் சாட்ட, திருத்தணி போலீசாரால், வெங்கடேசன் (பஞ்சாயத்து போர்டு உப தலைவர்) உள்பட 6 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்ட வழக்கு, 23-12-53 சித்தூர் எஸ். டி. எம், கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கைக் காண, சித்தூர் தி மு. கழகத்தினரும், பொது மக்களும் வந்திருந்தனர் வழக்கு 11—1—54க்கு ஒத்திவைக்கப்பட்டது.

பிராசிகியூஷன் தரப்பில் ஏ எல். சி கிருஷ்ணசாமி, என். ஏ ரசீத், ஏ. முனுசாமி [illegible]

தோழர் ஆ. தர்மலிங்கம் தண்டிக்கப்பட்டார்

சென்னை, டிச. 24— கண்டனப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்ட 59-வது வட்டத்தைச் சேர்ந்த தோழர் ஆ தர்மலிங்கம் என்பவர் 7-வது மாகாண மாஜிஸ்திரேட்டால் ஒருமாத சிறை தண்டனை விதிக்கப்பட்டு சிறைபுகுந்தார்.

பழங்குடி..........

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பலர் உயர்ந்த நிலைக்கு வந்துள்ளதேயாகும்.''

''நகர வட்டாரங்களிலேயே சாதிபேதம் மறைந்து வருகிறது. பலகிராமங்களில் சாதி இந்துக்களிடையேயும் சாதி பேதங்கள் இன்னும் நிலவி வருகின்றன. மற்ற சாதி பேதங்கள் இன்னும் நிலவி வருகின்றன. மற்ற சாதி பேதங்கள் ஒழியும் போதுதான் தாழ்த்தப்பட்டோர் பற்றிய பேதங்களும் ஒழியும்.''

''தீண்டாமையை ஏழ்மையுடன் இணைத்துக் குழப்பக் கூடாது. இரண்டும் வெவ்வேறானவை. எல்லா ஏழைகளும் தீண்டப்படாதவர்களல்லர். அல்லது தீண்டப்படாதார் அனைவரும் ஏழையரல்லர். 1937-39ம் ஆண்டில் அரிசன வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்ட தொகை 7 லட்சமே யாகும். இப்போது இத்தொகை 1,18,09 400 ரூபாயாக உயர்ந்துள்ளது. தற்போதைய சென்னை மாநிலத்தில் இத்துறையில் மேலும் ரூ 39 லட்சம் செலவிடப்படவிருக்கிறது.''

''இந்தச் சிக்கல் பற்றவர்களுடன் அரிசனங்களும் கிணறுகளில் குடி தண்ணீர் மொள்ள அனுமதிக்க வேண்டுமென்று தொடங்கியது. பிறகு பாரோ இவர்களை உதவிச் சம்பளம் கோருமாறு தூண்டி விட்டனர். அதன்பின் அவர்களுக்குள்ளேயே போட்டிகள் ஏற்படத் தொடங்கியது இதனால் இவர்களுக்கிடையே நிலவும் வேற்றுமைகளை இணைத்து வைப்பதே கடினமாகி விட்டது.''

''அரிசன பெண்களை மணந்து கொள்வோருக்கு அரசாங்கப் பதவிகள் [illegible]த்தில் சலுகை காட்டப்பட வேண்டும் என்று கூறுவது முறையற்றதும், நீதிக்கு ஒவ்வாததுமாகும். இதனால் மனைவியர் தமது கணவர்களிடம் தங்களுடைய சாதியைக் கொண்டே அவர்களுக்கு வேலை கிடைத்திருக்கிறதென்று கூறக்கூடும்— அதனால் குடும்பச் சச்சரவு ஏற்படும்.''

கடலில் வழிதப்பிய பாகிஸ்தானிகள்

புதுடில்லி, டிச 24— ஏழு பாகிஸ்தானியர், [illegible] சிட்டகாங்குக்கும், அந்தமான் பிரதேசத்துக்கும் இடையே கரையோர வர்த்தகத்தில் உபயோகிக்கப்படும் சிறிய நாட்டுப் படகொன்றில் வழிதப்பி, 13 நாட்கள் நடுக்கடலில் அல்லலுற்று, பின்னர், நவம்பர் 26-ம் தேதியன்று, ஒரிஸாவைச் சேர்ந்த கஞ்சம் கடற்கரையோரத்திலுள்ள ஸோருப்பூர் கிராமத்தில் கரையிறங்கியது உண்மைதானா என்று மக்கள் சபையில் கூறப்பட்டது.

இது விஷயம் சம்பந்தமாக சர்க்கார் மேற்கொண்டுள்ள நடவடிக்கை பற்றிக் கூறப்படுகையில், ''சம்பந்தப்பட்ட நபர்களைப் பாகிஸ்தானுக்குத் திருப்பியனுப்புவதற்காக, இந்தியாவிலுள்ள பாகிஸ்தான் ஐகமிஷனர் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது. இதன் மத்தியில் இவர்கள் ஸ்தல அதிகாரிகளால் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்'' என்று குறிப்பிடப்பட்டது.

1952—53ல், மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் 13 802 பேர் கைது செய்யப்பட்டதாகவும், இவர்களில் 11,840 பேர் தண்டனை பெற்றதாகவும், மதுவிலக்கு மந்திரி ஜோதி வெங்கடாசலம், சென்னை சட்டசபையில், கேள்வி நேரத்தின் போது தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், கழகம் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (94, [illegible] செட்டித் தெரு, [illegible]) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.